# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 301 | 4 Pages | 4.6.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 301 | 4 பக்கங்கள் | 4.6.2024 | செவ்வாய்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# கம்பீர தமிழ்நாட்டை உருவாக்கி காட்டுவோம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 4

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு 101வது பிறந்தநாள் ஆகும். இதையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் தி.மு.க. தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் காலை 9 மணியளவில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார். பின்னர் அவர், அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதியின் முழு உருவச் சிலைக்கு காலை 9.15 மணியளவில் மாலை அணிவிக்கிறார்.

அங்கு கருணாநிதி உருவச்சிலைக்கு கீழே பூக்களால் அலங்கரித்து வைக்கப்படும் உருவப்படத்துக்கு மலர்களை தூவி மரியாதை செலுத்துகிறார். இதைத்தொடர்ந்து காலை 9.30 மணியளவில் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்த உள்ளார்.



இந்த நிலையில், கருணாநிதி பிறந்தநாளையொட்டி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியதாவது:

நவீன தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பி கருணாநிதி. இந்த பூமி பந்தில் வாழும் தமிழர்களுக்கு எல்லாம் குடும்ப தலைவர். இந்திய நாடே அண்ணாந்து பார்த்த அரசியல் ஞானி. எல்லா ஆண்டும் கலைஞர் ஆண்டே. அவர் ஆண்ட ஆண்டும், வாழ்ந்த ஆண்டும் மட்டும்மல்ல எல்லா ஆண்டும் கலைஞர் ஆண்டே.

வீழ்ந்து கிடந்த தமிழ் சமுதாயத்திற்கு விடிவெள்ளியாக தோன்றி வாழும் காலத்தில் ஒளி தரும் உதய சூரியனாய் வாழ்ந்து, நிறைந்து பிறகும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டி கொண்டிருப்பவர்தான் கலைஞர். இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் திரும்பி பார்க்கும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறோம். உலக நாடுகளோடு போட்டி போடும் அளவுக்கு தொழில் வளர்ச்சி கண்டு வருகிறோம்.

மகளிர் மனங்களில் மகிழ்ச்சியின் விளையாட்டு... மாணவமாணவர்களின் உள்ளங்களில் உணர்ச்சியின் தாலாட்டு... விவசாயிகளின் எண்ணங்களில் பசுமையின் நீராட்டு... இதுதானே நீங்கள் நினைத்தது. நீங்கள் கனவு கண்ட கம்பீர தமிழ் நாட்டை உருவாக்கிக் காட்டுகிறோம். நீங்கள் நினைத்தீர்கள். நாங்கள் செய்து காட்டி வருகிறோம். நீங்கள் இருந்து செய்ய வேண்டியதை உங்கள் மகனாக நான் செய்து வருகிறேன். நீங்கள் பாதை அமைத்தீர்கள்.. நாங்கள் பயணத்தை தொடர்கிறோம். உங்கள் பெயரை காக்க எந்நாளும் உழைப்போம். உழைப்பு...உழைப்பு...உழைப்பு... இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# கருத்துக் கணிப்பையும் தாண்டி பா.ஜ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்: ஜி.கே.வாசன்



சிவகங்கை, ஜூன் 4

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி நிர்வாகியின் இல்ல விழாவில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

நாடாளுமன்ற தேர்தலில் கருத்துக்கணிப்பை தாண்டி, மக்கள் கணிப்பின் அடிப்படையில் பா.ஜ.க. அதிக இடங்களில் வெற்றி பெறும். 10 ஆண்டுகால பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசினுடைய மக்கள் பணிகள், சாதனைகள் அதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதேபோல், தமிழகத்திலும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் அதிக எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல தொகுதியில் வெற்றி பெறுவதற்கான நல்ல வாய்பை மக்கள் ஏற்படுத்தி உள்ளனர். தமிழக தேர்தலில், பா.ஜ.க. கூட்டணியின் தேர்தல் பணிக்கு மக்கள் நல்ல அங்கீகாரம் வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

மூன்றாவது முறையாக பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும். நல்லரசாக செயல்படும் மத்திய அரசு, இந்தியாவை வல்லரசாக மாற்றும். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. அதில் அனைத்து கூட்டணி கட்சிகளுக்கும் பங்கு உண்டு. நாட்டின் உயர்வில் எங்களுக்கு பங்கு உண்டு. அனைத்து மாநிலத்தின் உயர்வையும் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லாமல் மத்திய பா.ஜ.க. செயல்படுத்தும். பதவிகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் நலன் கருதி, வளம் கருதி, பா.ஜ.க. கூட்டணியில் த.மா.கா. தொடர்ந்து நீடிக்கும். ஒரு கட்சியின் வெற்றி தோல்விகளை தீர்மானிக்கும் இடத்தில் மக்கள் தான் உள்ளனர். தமிழகத்தில் பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க. என மூன்று கட்சிகள் உள்ளன. தேர்தலுக்கு தேர்தல் வாக்குவங்கி, சதவீதம் என எல்லா கட்சிகளுக்கும் மாறும். தி.மு.க.வும் ஒரு காலத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கட்சியாக சட்டசபையில் இருந்தது.

பா.ஜ.க.வும் கூட ஒரு காலத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் நாடாளுமன்றத்தில் இருந்தனர். தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம்.

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் மீது சுமையை சுமத்தியுள்ளதை யாராலும் மறக்க முடியாது, மன்னிக்கவும் முடியாது. வருகிற 2026ம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையில் அதிக கட்சிகளுடன் நல்ல கூட்டணி அமையும். இவ்வாறு அவர் கூறினார்.



## ஓசூர் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட செயலாளர்க்கு பிறந்தநாள் வாழ்த்து

கிருஷ்ணகிரி, ஜூன்,4

திமுக கழக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் பிறந்த நாளையொட்டி இளைஞர் அணி மாநில துணை செயலாளர் பார்த்துக்கோட்டை பி. எஸ்.சீனிவாசன் அவர்கள் மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.சுமன் மற்றும் கிருஷ்ணகிரி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணன், நரசிம்மன், பிரகாசன்(எ) ராஜு, தனுகுமார், முஜாமில் பாஷா,சீதாராமன், மற்றும் ஓசூர் மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு இன்று நேரில் சென்று கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக கழக செயலாளர் ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பூமாலை அணிவித்து இனிப்பு வழங்கி பிறந்தநாளை மிக சிறப்பாக கொண்டாடினார்கள்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அப்பம்பட்டில் பஸ் நிலையம் அருகில் திமுக சார்பில் செஞ்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் முன்னாள் முதல்வர் கலைஞரின் 101 வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்

## டிராக்டர் கவிழ்ந்து விபத்து: 4 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழப்பு

ராஜ்கர், ஜூன் 4

மத்தியப் பிரதேச மாநிலம் ராஜ்கர் மாவட்டத்தில் உள்ள பிப்லோதிஜாத் என்ற இடத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு டிராக்டர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 4 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 15 பேர் காயமடைந்தனர். அவர்கள் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் காயமடைந்தவர்களில் 13 பேர் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற இருவர் தலை மற்றும் மார்பில் பலத்த காயங்கள் ஏற்பட்டதன் காரணமாக மேல் சிகிச்சைக்காக போபாலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் இருவரும் அபாய கட்டத்தை தாண்டி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துருக்கியில் அடுக்குமாடி குடியிருப்பு சரிந்து 7 பேர் படுகாயம்

அங்காரா, ஜூன் 4

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ளது. இதில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த நிலையில் கட்டிடம் நேற்று திடீரென சரிந்து விழுந்தது. அப்போது வீட்டில் இருந்தவர்கள் இந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி கொண்டனர். மேலும் பஸ் ஏற காத்திருந்த பயணிகள் மீதும் அந்த கட்டிடத்தின் இடிபாடுகள் விழுந்தன.

இதுகுறித்து தகவலறிந்த மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் அங்கு சென்று படுகாயம் அடைந்த 7 பேரை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சிலர் கட்டிட இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

## ஜெர்மனியில் கனமழை: வெள்ளப்பெருக்கால் 1,300 பேர் வெளியேற்றம்



பெர்லின், ஜூன் 4

ஜெர்மனியின் பவேரியா, பேடன் வுர்ட்டம்பேர்க் மாகாணங்களில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள டோனாவ், நெக்கர், குயென்ஸ் உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இதன் காரணமாக சில ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் அங்குள்ள 10 மாவட்டங்களுக்கு அவசர நிலை விடுக்கப்பட்டு உள்ளது.

எனவே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில் இருந்து சுமார் 1,300 பேர் வெளியேற்றப்பட்டு உள்ளனர். இதற்காக அங்கு பல தற்காலிக நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

## ஐஸ்லாந்தின் புதிய அதிபராக ஹல்லா தோமஸ் டோட்டிர் தேர்வு



ரெக்ஜாவிக், ஜூன் 4

ஐஸ்லாந்து நாட்டில் அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் பெண் தொழில் அதிபரான ஹல்லா தோமஸ் டோட்டிர் மற்றும் முன்னாள் பிரதமர் கேத்ரின் ஜாகோப்ஸ்டோட்டிர் போட்டியிட்டனர்.

இந்நிலையில்தொழிலதிபரும், முதலீட்டாளருமான ஹல்லா தோமஸ்டோட்டிர், அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்களில் அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார்,

இதன்படி ஐஸ்லாந்து நாட்டின் புதிய மற்றும் இரண்டாவது பெண் அதிபராக ஹல்லா தோமஸ் டோட்டிர் பதவியேற்க உள்ளார். 55 வயதான தோமஸ் டோட்டிர் 34.3 சதவீத வாக்குகளும், 48 வயதான ஜாகோப்ஸ்டோட்டிர் 25.5 சதவீத வாக்குகளும் பெற்றனர்.

இதனையடுத்து ஹல்லா தோமஸ் டோட்டிர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். முன்னதாக கடந்த 1980ம் ஆண்டில் விக்டிஸ் பின்னபோகாடோட்டிர் முதல் பெண் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் ஜோ பைடனை நோக்கி கண்டன முழக்கம் எழுப்பிய பாலஸ்தீன ஆதரவாளர்கள்

வாஷிங்டன், ஜூன் 4

இஸ்ரேல்ஹமாஸ் போரில் காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை முடிவுக்கு வராத நிலையில், தாக்குதல் நீடிக்கிறது. போரை நிறுத்தும்படி பல்வேறு நாடுகள் வலியுறுத்தின. எனினும், ஹமாசை முற்றிலும் ஒழிக்கும் வரை தாக்குதலை நிறுத்தமாட்டோம் என இஸ்ரேல் உறுதியாக உள்ளது.

இதற்கிடையில்இஸ்ரேலுக்கு எதிராகஅமெரிக்காமுழுவதும்பாலஸ்தீன ஆதரவாளர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். முன்னதாக அமெரிக்காவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்களில் மாணவர்கள் ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டம் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் ரெஹோபோத் கடற்கரையில் உள்ள தேவாலயத்திற்கு அந்நாட்டின் அதிபர் ஜோ பைடன் சென்றார். அங்கே பாலஸ்தீனஆதரவாளர்கள்திரண்டு போராட்டம் நடத்தி வந்தனர். அவர்கள் அமெரிக்கஅதிபர்பைடனைநோக்கிகண்டனமுழக்கங்களைஎழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

தேவாலயத்தில் இருந்து வெளியே வந்த ஜோ பைடனை நோக்கி, காசாவில் 16 ஆயிரம் பாலஸ்தீனகுழந்தைகள்கொல்லப்பட்டுள்ளதாகவும், பாலஸ்தீனத்தை விடுவிக்க வேண்டும் என்று முழக்கங்கள் எழுப்பிய அவர்கள், "உங்களைக் கண்டு வெட்கப்படுகிறோம்" என காட்டமாக தெரிவித்தனர்.

# காதல் திருமணம் செய்த பட்டதாரி பெண் தற்கொலை

சிதம்பரம், ஜூன் 4

கரூர் மாவட்டம் சேந்த மங்கலம் அருகே உள்ள புதுப்பட்டி பகுதியை சேர்ந்தவர் சுப்பிரமணியன். இவருடைய மகள் நிவேதிதா (வயது 25), இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் படித்தபோது, அதே பல்கலைக்கழகத்தில் படித்த கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள பள்ளிப்படை தில்லையம்மன் நகர் பகுதியை சேர்ந்த கபிலர் மகன் சுபாஷ் சந்திர போஸ் (30) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு, காதலாக மாறியது.

இவர்கள் இருவரும், கடந்த 27122022 அன்று திருமணம் செய்து கொண்டு சிதம்பரம் பள்ளிப்படை தில்லை அம்மன் நகர் பகுதியில் வசித்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நிவேதிதா வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப்போட்டு தற்கொலைசெய்துகொண்டார்.



இதுகுறித்து நிவேதிதாவின் தாய் நேற்று சிதம்பரம் நகர போலீஸ் நிலையத்தில் புகார்அளித்தார். அதில் தனது மகளின் சாவில் சந்தேகம் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார். அதன்போில் சப் இன்ஸ்பெக்டர் பரணிதரன் வழக்குப்பதிவு செய்து, நிவேதிதா தற்கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றார்.

காதல் திருமணம் செய்த பட்டதாரி பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



மதுரை தல்லாகுளம் தலைமை அலுவலகம் அருகில், தமிழ்நாடு காவிரி வைகை கிருதுமால் மற்றும் குண்டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் சார்பில் பொதுப் பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட போராட்டம் நடத்தினர். இதில் முல்லைப் பெரியாரில் புதிய அணைக் கட்ட முயற்சிப்பதாக கேரள அரசைக் கண்டித்து கோஷமிட்டனர். இதில் மாநிலத் தலைவர் மாரிமுத்து தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் முருகன், ரவி, மாநிலத் துணைத் தலைவர் பாலகிருஷ்ணன், மச்சேஸ்வரன், மாநில துணைச் செயலாளர் அய்யனார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குளிர்பானத்தில் மயக்க மருந்து: இளம்பெண்ணை பலாத்காரம் செய்த சினிமா தயாரிப்பாளர்

அம்பத்தூர், ஜூன் 4

சென்னை கொளத்தூரைச் சேர்ந்தவர் முகமது அலி (வயது 30). சினிமா தயாரிப்பாளரான இவர், சென்னை கீழ் அயனம்பாக்கத்தில் அலுவலகம் நடத்தி வருகிறார். இந்த அலுவலகத்தில் கொரட்டூர் பகுதியை சேர்ந்த 28 வயது இளம்பெண், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வேலைக்கு சேர்ந்தார்.

இந்தநிலையில் அம்பத்தூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் சினிமாதயாரிப்பாளர் முகமது அலி மீது அந்த இளம் பெண் பரபரப்பு புகார் ஒன்றை கொடுத்தார்.

அதில், "முகமது அலி தனக்கு திருமணம் ஆனதை மறைத்து, என்னை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தை கூறினார். எனக்கு குளிர்பானத்தில் மயக்க மாத்திரைகளை கலந்து கொடுத்து பாலியல் பலாத்காரம் செய்தார். அதனை வீடியோவாக பதிவு செய்து கொண்டார்.



இதில் கர்ப்பமான எனக்கு, சத்து மாத்திரைகள் எனக்கூறி கருக்கலைப்பு மாத்திரைகளை வாங்கி கொடுத்து கருவை கலைத்தார். கருக்கலைப்பு குறித்து வெளியே சொன்னால் கொலை செய்து விடுவேன் எனவும், என்னை பாலியல் பலாத்காரம் செய்தபோது எடுத்த வீடியோவை இணையதளத்தில் வெளியிடாமல் இருக்க ரூ.5 லட்சம் கேட்டும் மிரட்டுகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த புகாரில் அந்த பெண் கூறி இருந்தார்.

அதன்பேரில் அம்பத்தூர் அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தினர். அதில் இளம்பெண்ணின் குற்றச்சாட்டுகள் உண்மை என தெரிய வந்தது. இதையடுத்து சினிமாதயாரிப்பாளர் முகமது அலி மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த போலீசார், அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# வாக்கு எண்ணும் பணிகளை பார்வையிட பொது பார்வையாளர்கள் நியமனம்



சென்னை, ஜூன் 4

சென்னையில் உள்ள 3 நாடாளுமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் பணிகளை பார்வையிட வாக்கு எண்ணிக்கைக்கான பொது பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாடாளுமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறவுள்ளது. இதையொட்டி சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட தென் சென்னை, மத்திய சென்னை, வட சென்னை நாடாளுமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைக்கான பொது பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

வாக்கு எண்ணும் பணிகளை பார்வையிட, வட சென்னை தொகுதிக்கு உட்பட்டதிருவொற்றியூர், ஆர்.கே.நகர், ராயபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கு கார்த்திகே தன்ஜி புத்தப்பாட்டி (செல்போன் எண் 94459 10953) நியமனம் செய்யப்பட்டுள்ளார். பெரம்பூர், கொளத்தூர், திரு.வி.க.நகர் தொகுதிகளுக்கு ராஜேஷ் குமார் (94459 10932) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மத்திய சென்னை தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம், எழும்பூர், துறைமுகம் தொகுதிகளுக்கு ஜிதேந்திரா ககுஸ்தே (94459 10940), சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் சட்டமன்ற தொகுதிகளுக்கு டி.சுரேஷ் (94459 10956) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென் சென்னை தொகுதிக்குட்பட்ட விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராய நகர் தொகுதிகளுக்குமுத்தாடா ரவிச்சந்திரா (94459 10957), மயிலாப்பூர், வேளச்சேரி, சோழிங்கநல்லூர் தொகுதிகளுக்கு முகமது சபிக் சக் (94459 10945) ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குடும்ப தகராறு: 3 வயது மகனை ஏரியில் வீசிய கொடூர தந்தை... அடுத்து நடந்த பரபரப்பு

சென்னை, ஜூன் 4

சென்னையை அடுத்த தாம்பரம் மதுரவாயல் பைபாஸ் சாலையில் மோட்டார் சைக்கிளில் 3 வயது சிறுவனுடன் வந்த ஒருவர், போரூர் ஏரி மேம்பாலத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். பின்னர்மோட்டார்சைக்கிளில் அமர்ந்திருந்த சிறுவனை, திடீரென போரூர் ஏரியில் தூக்கி வீசிவிட்டு மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

ஏரியில் மீன் பிடித்து கொண்டிருந்த சிலர் இந்த காட்சியை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக ஏரிக்குள் நீந்திச் சென்று ஏரியில் தத்தளித்து கொண்டிருந்த சிறுவனை உயிருடன் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். பின்னர் அந்த சிறுவனை போரூர் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.



போலீசார் நடத்திய விசாரணையில் ஏரியில் சிறுவனை வீசிவிட்டு சென்றது, சென்னை தலைமை செயலக காலனியை சேர்ந்த மோகன் ராஜ் என்பதும், ஏரியில் வீசி சென்ற சிறுவன் அவரது மகன் தர்சன் என்பதும் தெரியவந்தது.

மோகன்ராஜ், தனது மனைவி பிரியாவுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறில் மனைவியை வீட்டுக்குள் அடைத்து கதவை வெளிப்புறமாக பூட்டினார். பின்னர் கோபத்தில் தனது 3 வயது மகன் தர்சனை மோட்டார்சைக்கிளில் அழைத்து வந்து போரூர் ஏரியில் வீசிச் சென்றது தெரிந்தது.

இதுபற்றி அயனாவரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள், சிறுவனின் தாய் பிரியாவுடன் போரூர் போலீஸ் நிலையம் வந்தனர்.

அங்கு தாயிடம் சிறுவனை போலீசார் பத்திரமாக ஒப்படைத்தனர். மனைவியுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறில் பெற்ற மகனையே ஏரியில் வீசிவிட்டு தப்பி ஓடிய கொடூர தந்தையை போலீசார் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


# தமிழகம் முழுவதும் அமலானது சுங்கச்சாவடி கட்டண உயர்வு

சென்னை, ஜூன் 4

மத்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய ஒப்பந்தப்படி தேசிய நெடுஞ்சாலைகளில் கடந்த 1992ம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஏப்ரல் மாதமும், 2008ம் ஆண்டு அமைக்கப்பட்ட சாலைகளுக்கு செப்டம்பர் மாதமும் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இந்த சூழலில் மார்ச் 31 நள்ளிரவு 12 மணி முதல் சுங்கச்சாவடிகளில் 5 முதல் 10 விழுக்காடு வரை கட்டணத்தை உயர்த்தி வசூலிக்குமாறு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுற்றறிக்கை அனுப்பி இருந்தது. அந்தவகையில் தமிழகத்தில் உள்ள 36 சுங்கச்சாவடிகளில் கடந்த ஏப்ரல் மாதம் உயர்த்தப்பட வேண்டிய சுங்க கட்டணம் உயர்த்தப்படவில்லை.

இந்நிலையில் இந்த கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. அதன்படி சென்னை புறநகரில் உள்ள பரனூர் மற்றும் ஆத்தூர் ஆகிய சுங்கச்சாவடிகளிலும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. பரனூர் சுங்கச்சாவடியில் கார், ஜீப், வேன் மற்றும் 3 சக்கர வாகனங்கள் ஒருமுறை பயணம் செய்ய ரூ.70, ஒரே நாளில் சென்று திரும்ப ரூ.110, மாதாந்திர கட்டணம் ரூ.2,395. இலகுரக சரக்கு வாகனங்கள் சிற்றுந்துகளுக்கு ஒரு முறை பயணம் செய்ய ரூ.115, ஒரே நாளில் சென்று திரும்ப ரூ.175, பஸ், சரக்கு வாகனங்கள் ஒருமுறை பயணம் செய்ய ரூ.245, ஒரேநாளில் சென்று திரும்ப ரூ.365 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




3 அச்சுகள் கொண்ட வர்த்தக வாகனங்கள் ஒரு முறை பயணம் செய்ய ரூ.265, ஒரே நாளில் சென்று திரும்ப ரூ.400 கட்டணம் ஆகும். 4 சக்கர, 6 சக்கர சரக்கு வாகனங்கள் ஒருமுறை பயணம் செய்ய ரூ.380, ஒரேநாளில் சென்று திரும்ப ரூ.570 கட்டணம். கடும் கனரக கட்டுமான வாகனங்கள் 7 மற்றும் கூடுதல் சக்கர வாகனங்கள் ஒருமுறை பயணம் செய்ய ரூ.465, ஒரேநாளில் சென்று திரும்ப ரூ.695 கட்டணம் ஆகும்.

உள்ளூர் கார்கள் ஒரு சுங்கச்சாவடியை கடக்க மாதம் ரூ.340 உத்தேச கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# குடிபோதையில் தொடர்ந்து டார்ச்சர் செய்த கணவன்... குழவிக்கல்லை தலையில் போட்டு கொன்ற மனைவி

வையம்பட்டி, ஜூன் 4

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த ஆவாரம்பட்டி தெற்குத் தெருவைச் சேர்ந்தவர் வில்லியம் வேளாங்கண்ணி (வயது 30). கட்டிடத் தொழிலாளியான இவருக்கும், அற்புதமேரி(27) என்பவருக்கும் திருமணமாகி ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். குடிபோதையில் வில்லியம்வேளாங்கண்ணி தனது மனைவியுடன் தொடர்ந்து பிரச்சினை செய்ததாகவும், இது தொடர்பாக அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.



இதேபோல் நேற்று காலை அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதையடுத்து அற்புதமேரி தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டு, பின்னர் மாலையில் ஊருக்கு சென்றுள்ளார். அப்போது குடிபோதையில் வில்லியம் வேளாங்கண்ணி வீட்டில் படுத்திருந்ததாக தெரிகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த அற்புதமேரி அங்கிருந்த குழவிக்கல்லை எடுத்து, வில்லியம் வேளாங்கண்ணியின் தலையில் போட்டுள்ளார்.

இதில் ரத்த வெள்ளத்தில் வில்லியம்வேளாங்கண்ணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது பற்றி தகவல் அறிந்த வையம்பட்டி போலீசார், உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். மேலும் மணப்பாறை போலீஸ் துணை சூப்பிரண்டு தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். கைரேகை நிபுணர்கள் வந்து தடயங்களை சேகரித்தனர். இதையடுத்து வில்லியம் வேளாங்கண்ணியின் உடலை வையம்பட்டி போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனை க்காக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்குப்பதிவு செய்து, அற்புதமேரியை கைது செய்து விசாரணை நடத்தினர். முதல்கட்டவிசாரணையில், கணவன் மனைவி இடையே தொடர்ந்து பிரச்சினை ஏற்பட்டு வந்ததும், குடிபோதையில் தன்னை துன்புறுத்தி வந்ததால் ஆத்திரம் அடைந்த அற்புதமேரி கொலை செய்ததும் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# யூடியூப்பில் நிர்வாண படம் : பொய்யான தகவலை சொல்லி இளம்பெண்ணை மிரட்டி பணம் பறித்த ஆசாமி

சென்னை, ஜூன் 4

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியை சேர்ந்த 23 வயதுடைய இளம்பெண் ஒருவர் நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள பெண்கள் தங்கும் விடுதியில் தங்கியிருந்து தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வருகிறார். இவருடைய செல்போன் எண்ணுக்கு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் பேசுகிறேன் என்று ஒருவர் பேசி உள்ளார். அவர், அந்த இளம்பெண்ணிடம் உங்களுடைய ஆபாச வீடியோ யூடியூப்பில் இருக்கிறது. ரூ.9 ஆயிரம் பணம் கொடுத்தால் அந்த வீடியோவை நீக்கிவிடுகிறேன் என்று கூறியுள்ளார். இதனால் பயந்து போன அந்த இளம்பெண் சப்இன்ஸ்பெக்டர் என்று பேசியவரின் 'கூகுள் பே' எண்ணுக்கு ரூ.6 ஆயிரத்து 500 பணம் அனுப்பி உள்ளார். பின்னர், அந்த நபர், அந்த பெண்ணின் தந்தையின் செல்போன் எண்ணை வாங்கி அவரிடம் பேசி உள்ளார். அப்போது அவரது மகளை பற்றி தவறாக கருத்துக்களை கூறி, உங்கள் மகளின் நிர்வாண 'வீடியோ' யூடியூப்பில் இருக்கிறது. இந்த வீடியோவை நீக்குவதற்கு ரூ.1 லட்சம் பணம் தர வேண்டும். இல்லையென்றால் இந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு அசிங்கப்படுத்தி விடுவேன் என்று மிரட்டி உள்ளார். இதுதொடர்பாக அந்த இளம்பெண் நுங்கம்பாக்கம் போலீஸ் நிலையம் சென்றார். தன்னிடம் செல்போனில் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் பேசி மிரட்டிய தகவலை தெரிவித்தார். பெண் குறிப்பிட்ட பெயரில் யாரும் சப்இன்ஸ்பெக்டர் இல்லை என்பதும், இந்த இளம்பெண்ணிடம் யாரோ மர்ம நபர் ஒருவர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் போல் பேசி, நிர்வாண படம் இருப்பதாக பொய்யான தகவலை சொல்லி மிரட்டி பணம் பறித்திருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து நுங்கம்பாக்கம் போலீசார் 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கி உள்ளனர்.

# நடுரோட்டில் காதலியை அரிவாளால் வெட்டி கொல்ல முயன்றது ஏன்..? கைதான எலக்ட்ரீசியன் பரபரப்பு வாக்குமூலம்

சேலம், ஜூன் 4

சேலம் பள்ளப்பட்டி பகுதியை சேர்ந்தவர் விஜயகணேஷ். இவருடைய மனைவி பிரியா (வயது 28). இவருக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு விஜயகணேஷ் இறந்துவிட்டார். இதனால் பிரியா சேலம் 4 ரோடு பகுதியில் உள்ள ஒரு பிரியாணி கடையில் வேலை பார்த்து குழந்தைகளை கவனித்து வந்துள்ளார்.

அப்போது, வீராணம் அடுத்த டி.பெருமாபாளையத்தை சேர்ந்த எலக்ட்ரீசியன் கோகுல் (23) என்பவருடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து வந்ததாக கூறப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 2 மாதங்களாக கோகுலுடன் பிரியா சரிவர பேசவில்லை என தெரிகிறது. இதுபற்றி அவரிடம் கேட்டும் சரியாக பதில் கூறாமல் அவருடைய செல்போன் எண்ணையும், பிரியா பிளாக் செய்து விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் கோகுல் கடும் கோபத்தில் இருந்து வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு பிரியாணி கடையில் வேலை முடிந்து 4 ரோடு பகுதிக்கு பிரியா வந்து பஸ்சுக்காக காந்திருந்தார். அப்போது, அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த கோகுல், காதலி பிரியாவிடம்தன்னிடம் உள்ள தொடர்பை ஏன் துண்டிக்கிறாய்? அல்லது வேறு ஒருவருடன் உனக்கு தொடர்பு இருக்கிறதா? என கேட்டு அவரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.



பின்னர் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. பிறகு ஆத்திரம் அடைந்த கோகுல் மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த அரிவாளை எடுத்து நடுரோட்டில் பிரியாவை சரமாரியாக வெட்டினார். இதில், கழுத்து, தலையில் வெட்டு விழுந்ததால் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

இதை பார்த்த அங்கிருந்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் அவர்கள் கோகுலை மடக்கி பிடித்து தர்ம அடி கொடுத்து பள்ளப்பட்டி போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்து கோகுலை பள்ளப்பட்டி போலீசார் கைது செய்தனர். படுகாயம் அடைந்த பிரியா சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

காதலியை அரிவாளால் வெட்டி கொல்ல முயன்றது ஏன்? என்பது குறித்து கைதான எலக்ட்ரீசியன் போலீசாரிடம் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதில், "சேலம் 4 ரோட்டில் உள்ள பிரியாணி கடைக்கு அவ்வப்போது சாப்பிட செல்வேன். அப்போது, அங்கு வேலை செய்யும் பிரியாவுடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. அவரது கணவர் இறந்துவிட்டதாக என்னிடம் கூறினார். இதனால் அவர் மீது எனக்கு பரிதாபம் ஏற்பட்டது. அவரை திருமணம் செய்து கொள்ள ஆசை பட்டேன்.

கடந்த 4 ஆண்டுகளாக இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தோம். ஆனால் கடந்த சில மாதங்களாக என்னுடன் அவர் பேசுவதை தவிர்க்க தொடங்கினார். என்னகாரணம் என்று தெரியவில்லை. விசாரித்தபோது, வேறு ஒருவருடன் பிரியாவுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இது எனக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இதுபற்றி அவரிடம் கேட்டு மிரட்டுவதற்காகவே அரிவாளுடன் சென்றேன். பின்னர் 4 ரோட்டில் நின்றிருந்த பிரியாவிடம் வேறு ஒருவருடன் உள்ள தொடர்பை கைவிடுமாறு மிரட்டினேன். அப்போது, அவர் அந்த நபருக்கு போன் செய்து கூப்பிட்டார்.

இதனால் ஆத்திரத்தில் கையில் இருந்த அரிவாளால் வெட்டி கொல்ல முயன்றேன். ஆனால் அவர் தப்பித்து விட்டார்" என்று போலீசாரிடம் கோகுல் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் கைதான எலக்ட்ரீசியன் கோகுல் சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# கலைஞர் 101ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட திமுக சார்பில் மலரஞ்சலி



பெரம்பலூர், ஜூன் 4

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள, மாவட்ட கழக அலுவலகத்தில், கலைஞர் உருவப்படுத்திற்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, வி.எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், ஒன்றிய பொறுப்பாளர் சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், தொ.மு.ச. பேரவை கவுன்சில் மாவட்ட செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துசெல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்..

# காருக்குள்ளே கள்ளக்காதல்...? கண்டித்த மனைவி மீது தாக்குதல்... கோவையில் பரபரப்பு

கோவை, ஜூன் 4

கோவை பீளமேடு அருகே காந்திமாநகர் ஸ்ரீராம் நகரில் வசிப்பவர் 27 வயது பெண். இவர் ஐ.டி.நிறுவன ஊழியர். இவருக்கும் பாப்பம்பட்டி பிரிவு அருகே பள்ளப்பாளையம் பகுதியை சேர்ந்த 27 வயதான ஐ.டி.ஊழியரான ஒருவருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது.

இருவரும் ஐ.டி.நிறுவனத்தில் வேலை பார்த்ததால் கைநிறைய சம்பளம் கிடைத்துள்ளது. இதனால் இவர்களது இல்லற வாழ்க்கை இனிதாக கழிய தொடங்கியது. இணைபிரியாத தம்பதிகளாக வலம் வந்தனர். இதனை உறவினர்கள் இமைகொட்டாமல் பார்த்து ஆச்சரியப்பட்டனர். இந்த நிலையில்தான் அந்த அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்று நடந்தது. சம்பவத்தன்று கணவர், அந்த பகுதியில்தனதுகாரில்வேறொரு பெண்ணை அமர வைத்து பேசிக்கொண்டிருந்துள்ளார். இது பற்றிய செய்தி மனைவியின் காதுக்கு வந்தது. தேள்கொட்டியது போல் துடித்துப்போன அவள், ஆவேசம் அடைந்தாள். சம்பவ இடத்திற்கு நேரில் சென்றாள்.

தனது கணவரும், அந்த பெண்ணும் காரில் அமர்ந்து கதைபேசிக் கொண்டிருப்பதை கையும் களவுமாக கண்டுபிடித்தாள். உடனே சம்பவ இடத்திலேயே உரக்க கத்த தொடங்கினாள். தனது பார்வைக்கு எல்லை மீறியதுபோல் தெரிந்த கணவனை கண்டித்தாள்.

ஆரம்பத்தில் பயந்து நெளிந்த கணவன், மனைவியின் பேச்சை காது கொடுத்து கேட்க முடியவில்லை என்பதால் செய்த தவறையும் பொருட்படுத்தாமல், பதிலுக்கு பேச தொடங்கினார். போய் விடு... எல்லாம் வீட்டில் போய் பேசிக்கொள்ளலாம் என்று கூறி உள்ளான். ஆனால் மனைவியின் ஆவேசம் அடங்கவில்லை. இதனால் வாக்குவாதம் வளர்ந்தது. அக்கம், பக்கத்தினரும் வேடிக்கை பார்த்தனர்.

இந்த நிலையில், அவமானத்தில் கோபமடைந்த கணவன்தனது மனைவியை, கரம் பிடித்தவள் என்றும் பார்க்காமல், சரமாரியாக தாக்க ஆரம்பித்தான். எல்லை மீறி எட்டி உதைத்து, கையினால் அடித்து, வயிற்றில் குத்தி கீழே தள்ளிவிட்டு மிரட்டல் விடுத்தார்.

இதையடுத்து பீளமேடு போலீஸ்நிலையம்சென்ற அப்பெண் கணவன் மீது புகார் கொடுத்தார். புகாரின் பேரில் பீளமேடு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்அருள்பெருமாள்வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்திவருகின்றார். கள்ளக்காதலை கண்டித்த மனைவியை கணவர் தாக்கிய சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# புதுக்கோட்டை தலைமை அஞ்சலக தலைமை அஞ்சல் அலுவலர் என்.லலிதா விற்கு பணி ஓய்வு பாராட்டு







புதுக்கோட்டை, ஜூன் 4

புதுக்கோட்டை தலைமை அஞ்சலக தலைமை அஞ்சல் அலுவலர் என்.லலிதாவிற்கு பணி ஓய்வு பாராட்டு விழா மீனா திருமண மஹாலில் சிறப்பாக நடைபெற்றது நிகழ்விற்கு தலைமை அஞ்சல் அதிகாரி (பொறுப்பு) நாகராஜன் தலைமை தாங்கினார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் முருகேசன் கலந்து கொண்டு அஞ்சலக தலைமை அஞ்சல் அலுவலர் என் லலிதாவின் பணியினை பாராட்டி வாழ்த்தி நினைவு பரிசு வழங்கி பேசினார் நிகழ்வில் தலைமையிடத்து உதவி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் சாமிநாதன் வடக்கு வட்டம்உதவி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் சர்மிளா புதுக்கோட்டை அஞ்சல் கோட்ட ஊழியர்கள் ,போஸ்ட் மேன் , உள்ளிட்ட நண்பர்கள் கலந்து கொண்டு தலைமை அஞ்சல் அலுவலர் என் லலிதாவின்பணியினை பாராட்டி பேசினார்கள் நிறைவாக அலுவலர் என்.. லலிதா தனது பணிக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைவரையும் நன்றி கூறி பேசினார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி சிவகாமி அம்பாள் திருக்கல்யாண திருவிழா: ஏராளமான பெண் பக்தர்கள் பங்கேற்பு



ஸ்ரீவில்லிபுத்தூர் ஜூன் 4

ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோவிலில் கும்பாபிஷேக பெருவிழா விமர்சையாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சிவ நாமத்தை மனமுருக உச்சரித்து கும்பாபிஷேக விழாவை கண்டு உவகை அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் லிங்க வடிவாக வைத்தியநாதர் என்ற பெயரில் எழுந்தருளி அருள் பாலிக்கும் சுவாமியையும், சிவகாமி அம்பாளையும் தரிசனம் செய்தனர்.

இதனை தொடர்ந்து இரவு திருக்கல்யாண திருவிழா சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும், அம்பாளுக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ ரகு என்ற கைலாச குருக்கள் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்கிட திருக்கல்யாண திருவிழா சுவாமிக்கும் அம்பாளுக்கும் சிறப்பாக நடைபெற்றது.

சிவஸ்ரீ ரமேஷ் என்ற சுவாமிநாத குருக்கள், சிவ ஸ்ரீ கல்யாண விக்னேஷ் குருக்கள், சிவ ஸ்ரீ பாலாஜி குருக்கள், சிவஸ்ரீ ஆனந்த விஜய் குருக்கள், சிவ ஸ்ரீ தியாகராஜ குருக்கள், சிவ ஸ்ரீ வைத்தியநாத குருக்கள் ஆகியோர் திருக்கல்யாண விழாவை சிறப்பாக ஆகம முறைப்படி நடத்தி வைத்தனர். திருக்கல்யாணத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான பெண் பக்தர்கள் புதிய தாலி சரடுகளை அணிந்து திருக்கல்யாண திருவிழாவினை தரிசித்தனர் திருக்கல்யாண விழா ஏற்பாடுகளை மதுரை அறநிலையத்துறை இணை ஆணையர் க.செல்லத்துரை, உதவி ஆணையர் து. வளர்மதி, கோவில் தக்கார் இரா. இலட்சுமணன், கோவில் செயல் அலுவலர் செ. முத்து மணிகண்டன் மற்றும் கோயில் அலுவலகங்களும் திருக்கோவில் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# சாதி மத பேத மற்ற சமுதாயத்தை உருவாக்க கூடியதுதொழில்நுட்பக் கல்வியே என உணர்ந்து விஜடி பல்கலைக்கழகத்தை விசுவநாதன் உருவாக்கியுள்ளார் : உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ப. சதாசிவம் பாராட்டு





வேலூர், ஜீன் 04

வேலூரில் உள்ள 25 சங்கங்கள் ஒன்றிணைந்து விஜடி பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்தினர் அமெரிக்காவில் உள்ள பிங் ஹாம் டன் பல்கலைக்கழகம் விஜடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதனுக்கு அவரின் கல்வி சேவையை பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது இதை கொண்டாடும் வகையில் வேலூரில் உள்ள தலைமுறை பேரவை என்ற அமைப்பு உட்பட 25 சங்கங்கள் ஒன்றிணைந்து வேந்தர் கோ.விசுவநாதனுக்கு பாராட்டு விழா நடத்தினர் இவ்விழாவில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ப. சதாசிவம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்து கூறினார் முன்னதாக நீதிபதி சதாசிவம் வேந்தர் கோ. விசுவநாதன் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் மு. வெங்கடசுப்பு அனைவரையும் வரவேற்றார் சிறப்பு விருந்தினர்களை கௌரவித்தலுக்கு பிறகு 10 மற்றும் 12ம் வகுப்பில் அரசு பள்ளியில் பயின்ற முதல் மாணவர்களை விழா மேடைக்கு அழைத்து சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர் விழாவில் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி முனைவர் ப. சதாசிவம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்தி பேசுகையில், கடுமையாக உழைத்தால் தான் உயர்வும் பதவிகளும் வரும் வி ஐ டி வேந்தர் விசுவநாதன் தன் கடுமையான உழைப்பால் வேலூர் சென்னை போபால் அமராவதி போன்ற இடங்களில் விஜடி பல்கலைக்கழகத்தை நிறுவி சிறப்பாக செயல்படுத்துகிறார் எல்லோருக்கும் தமிழ்நாட்டில் ஏன் இந்தியாவில் உள்ள எல்லோருக்கும் விஜடியில் சேர வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள் இதற்காக இந்த கல்வி நிறுவனத்தை நான் பாராட்டுகிறேன் தமிழ்நாட்டில் பின்தங்கிய மாணவர்களுக்கு உணவு தங்கும் வசதி போன்றவற்றுடன் கல்வி கட்டணம் இன்றி உயர்கல்வி தரும் வேந்தர் விஸ்வநாதனின் இந்த செயல் மிகவும் பாராட்டத்தக்கது இங்கு இரண்டு லட்சத்து 10 ஆயிரம் நூல்களை வைத்து நூலகம் அமைத்து அதற்கு பெரியார் நூலகம் என பெயர் வைத்திருப்பது பாராட்டத்தக்கது இவர் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் சிறப்பாக செயல்பட்டதுடன் அமைச்சராக இருந்து மக்களுக்கு சிறப்பாக பணியாற்றி இருக்கிறார் நம் மாணவர்களுக்கு கல்வித் தகுதியுடன் நல்ல வேலை வாய்ப்பையும் பெற்றுத் தருவது விசுவநாதனால் மட்டும்தான் முடியும் இந்த மண்ணில் சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க கூடியது தொழில் நுட்பக் கல்வியே என உணர்ந்து வேலூர் தொழில் நுட்பக் கல்லூரியை உருவாக்கி செயல்படுத்துகிறார் எவ்வளவு பெரிய சிறப்பு எதிராளிகள் கூட குறை சொல்ல முடியாதவர் விசுவநாதன் என ஒரு முறை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார் அப்படிப்பட்ட சிறப்புக் குறியவர் விசுவநாதன் விஜடி பல்கலைக்கழகம் தான் நாட்டில் முதன்மையான பல்கலைக்கழகமாக விளங்குகிறது வேலூரில் உள்ள 25 அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்த விழாவை நடத்துகிறார்கள் என்றால் விசுவநாதன் மீது இவர்கள் எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார்கள் அவர்களை பாராட்டுகிறேன் என நீதிபதி சதாசிவம் பாராட்டி பேசினார். கோயம்புத்தூர் கே ஜி மருத்துவமனை தலைவர் டாக்டர் கே ஜி பக்தவச்சலம் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், ஏழையாய் பிறப்பது தவறில்லை ஏழையாகவே இருப்பதுதான் தவறு என உணர்ந்து ஏழைகளை படிக்க வைப்பவர் வேந்தர் விசுவநாதன் இவரின் வெற்றிக்கு பின்னால் இவரின் 4 பிள்ளைகள் உள்ளனர் என்பதை நாம் பாராட்ட வேண்டும் எனது வெற்றிக்குப் பின்னாலும் நான்கு பெண்கள் உள்ளனர் அவர்கள் என் தாய் என் மனைவி என் மருமகள் என் மாமியார் என அவர் நகைச்சுவையாக குறிப்பிட்டார் வேலூர் மாவட்டத்தின் முன்னாள் ஆட்சியர் சி ராஜேந்திரன் ஜஏஎஸ் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், தன்னைத்தானே வளர்த்துக்கொண்ட தன்னைத் தானே செதுக்கிக் கொண்ட சுயம்பு தான் விசுவநாதன் தெய்வம் பல இடங்களில் சுயம்புவாக தோன்றுவது போல் தோன்றியவர் விசுவநாதன் .விசுவநாதன் என்றால் மக்களை காக்க கூடியவர் பாதுகாக்க கூடியவர் என்று பொருள் 1968இல் அண்ணாவுக்கு அமெரிக்காவில் உள்ள ஏல் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் கொடுத்தது அதுவரை யாருக்கும் அப்படிப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் இருப்பது தெரியாது அப்போதுதான் ஏல் என்ற பல்கலைகழகம் அமெரிக்காவில் உள்ளது என எல்லோருக்கும் தெரிய வருகிறது அப்படித்தான் வேந்தருக்கு அமெரிக்க பல்கலைக்கழகம் பட்டம் தந்துள்ளதால் அந்த பல்கலைக்கழகத்திற்கு அது பெருமை இப்போது அந்த பல்கலைக்கழகம் எல்லோருக்கும் தெரிய வருகிறது வீரம் மிகுந்த மண் வேலூர் அப்படிப்பட்ட வேலூரில் அவதரித்த அற்புத மனிதர் வேந்தர் விசுவநாதன் என அவர் குறிப்பிட்டார் விழாவில் பா பரணிதரன் வியாபாரிகள் சங்க தலைவர் ப ஞானவேலு முனைவர் ஐசரி கே கணேஷ் உள்ளிட்ட பலர் வாழ்த்தி பேசினார் ஏற்புரை வழங்கி விஜடி வேந்தர் கோ.விசுவநாதன் பேசுகையில், வேலூரில் உள்ள அத்தனை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து இருப்பதே பெரிய விஷயம் உயர்கல்வியில் இந்தியாவிற்கு தமிழ்நாடு வழி காட்ட வேண்டும் தமிழ்நாட்டிற்கு வேலூர் வழிகாட்ட வேண்டும் என நான் விரும்புகிறேன் ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அடிப்படை கல்வி தான் மக்கள் நலனை விரும்புகிற எந்த அரசும் இரண்டு காரியங்களை செய்ய வேண்டும் ஒன்று கல்வி இன்னொன்று சுகாதாரம் இந்த இரண்டும் செயல்படுத்தினால் அந்த நாடு நல்ல வளர்ச்சி அடைந்த நாடாக முன்னேற முடியும் கிராமப்புற மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று தான் ஸ்டார் திட்டம் துவக்கினோம் இத்திட்டத்தின் மூலம் வரும் மாணவர்களை என்ட்ரன்ஸ் எக்சாம் இல்லாமல் சேர்க்கிறோம் உயர்கல்வியுடன் வேலையும் வாங்கி தருகிறோம் வேலை செய்யும்போது அவர்கள் அப்பாவின் சம்பளத்தை விட 10 மடங்கு சம்பளம் அதிகமாக சம்பாதிக்கிறார்கள் இந்தியாவில் உள்ள 750 மாவட்டங்களில் நாம் உயர்கல்வியில் முன்னேற வேண்டும் என்பதால் தான் அனைவருக்கும் உயர் கல்வி அறக்கட்டளையின் மூலம் உயர்கல்வி பெற முடியாமல் இருக்கக்கூடியவர்கள் அவர்கள் விரும்பும் கல்லூரியில் சேர்ந்து படிக்க 3 ஆண்டுகளோ 5 ஆண்டுகளோ அனைத்திற்கும் உதவித் தொகை வழங்கி அவர்கள் உயர் கல்வியை பெற வழிவகை செய்கிறோம் இதுவரை 8,500 பேர் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இந்தப் பங்களிப்பில் எல்லோரும் பங்கேற்றால் இன்னும் இருக்கக்கூடிய எல்லோரையும் படிக்க வைக்கலாம் இந்த நாடு வளர்ந்து வர வேண்டுமானால் அனைவருக்கும் உயர் கல்வி வழங்கப்பட வேண்டும் மத்திய மாநில அரசு உதவி செய்ய வேண்டும் ஏழை நடுத்தர மாணவர்களுக்கு இலவசமாக உயர்கல்வி வழங்கப்பட வேண்டும் அப்படிப்பட்ட திட்டத்தை தமிழக முதல்வர் கொண்டுவர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்க கல்வியை தர வேண்டும் ஏழைகளும் நடுத்தர மக்களும் உயர வேண்டுமானால் உயர்கல்வி தரப்பட வேண்டும் இந்தியாவிற்கே நம் மாவட்டம் முன்மாதிரியாக திகழ வேண்டும் என்பது என்னுடைய ஆசை நாம் தான் இந்தியாவிற்கு வழி காட்டுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என வேந்தர் கோ விசுவநாதன் பேசினார் விழாவில் அனைவருக்கும் உயர் கல்வி வழங்கும் திட்டத்திற்கு அனைத்து சங்கங்களின் சார்பில் ரூ. 5 லட்சத்திற்கான காசோலையை வேந்தர் விசுவநாதனிடம் வழங்கினர் விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார் கார்த்திகேயன் ஈஸ்வரப்பன் மேயர் சுஜாதா கலைமகள் இளங்கோ அதிமுக மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு உள்ளிட்ட நகரின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர் இறுதியில் பெப்சி மு சீனிவாசன் நன்றி கூறினார்

# மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதை யொட்டி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் ஆய்வு

சேலம், ஜூன் 4

சேலம் மக்களவை பொதுத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை கருப்பூர், அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் நாளை 04.06.2024 நடைபெறவுள்ளதை யொட்டி, மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து தேர்தல் பொது பார்வையாளர் ஜி.பி.பாட்டீல், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு கொண்டார்கள்.

மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் கடந்த 19.04.2024 அன்று முடிவுற்றதைத் தொடர்ந்து, சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட, சேலம் வடக்கு, சேலம் மேற்கு, சேலம் தெற்கு, வீரபாண்டி, எடப்பாடி மற்றும் ஓமலூர் ஆகிய சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகங் களில் சட்டமன்ற தொகுதி வாரியாக அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை 04.06.2024, செவ்வாய்க்கிழமை கருப்பூர், அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் நடைபெறவுள்ளது. சேலம் மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்கு எண்ணிக்கைக்கு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 14 மேஜைகள் அமைக்கப்பட்டு, ஒரு சுற்றுக்கு 14 வாக்குப்பதிவு இயந்திரங்கள் எண்ணப்படும்.

மேலும், தபால் வாக்குகள் எண்ணுவதற்கென 6 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சம் 18 சுற்றுகளில் இருந்து அதிகபட்சமாக 25 சுற்றுகள் வரை வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

குறிப்பாக, வாக்கு எண்ணும் மையங்களில் அனைத்து இடங்களிலும் 314 கண்காணிப்பு கேமிராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தேர்தல் பொதுப் பார்வையாளர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலரால் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தில் 1,500 காவல் துறையினர் மற்றும் 1,500 அரசு அலுவலர்கள் என மொத்தம் 3,000 க்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுகின்றனர். மக்களவைப் பொதுத் தேர்தலில் பதிவான தபால் வாக்குகள் எண்ணுமிடம் மற்றும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் இடத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து இன்றையதினம் தேர்தல் பொதுப் பார்வையாளர் ஜி.பி. பாட்டீல், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாநகர காவல் ஆணையாளர் பி.விஜயகுமாரி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆக்ரிதி சேத்தி, மாநகர காவல் துணை ஆணையர் எஸ்.பிருந்தா, மாவட்ட வருவாய் அலுவலர் பெ.மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) ஏ.சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உலகிலேயே அதிக கஷ்டப்படும் ஒரே ஆள்... நடிகர் சிம்பு



இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தை 28 ஆண்டுகளுக்கு பிறகு இயக்குனர் சங்கர் இயக்கி இருக்கிறார். இந்த படத்தில் கமல் ஹாசன், பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

லைகா மற்றும் ரெட் ஜெயன்ட் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். சமீபத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது. 'இந்தியன் 2' திரைப்படம் அடுத்த மாதம் 12ந்தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று இப்படத்தின் இசைவெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில், சிம்பு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார் .

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் சிம்பு பேசியதாது, 'தக் லைப்' படப்பிடிப்பை முடித்துவிட்டுதான் இங்கு வந்திருக்கிறேன். அடுத்து, 'எஸ்.டி.ஆர்.48' படமும் தொடங்கும். உலகிலேயே அதிக கஷ்டப்படும் ஆள் யார்னா அது உண்மையை வெளிப்படையாக பேசுகிறவர்கள்தான்.

நானும் அதில் ஒருவன். மக்களவை தேர்தல் சமயத்தில் நான் படப்பிடிப்பில் இருந்தேன். சூட்டிங் கேன்சல் செய்துவிட்டு வரும் அளவுக்கு நான் பெரிய ஆள் கிடையாது. ஆனால், ஓட்டுப் போட வராதது எனக்கு வருத்தம்தான்', என்றார்.

# 'பொம்மை வாங்கி தர கூட அப்போது...' ராஷ்மிகா மந்தனா



இந்திய அளவில் அதிக ரசிகர்களை கவர்ந்தவர் என்ற பட்டியலில் முதல் இடம் பிடித்து இருப்பவர் நடிகை ராஷ்மிகா மந்தனா. இவர் நடித்த புஷ்பா திரைப்படம் இவருக்கு திருப்புமுனையாக அமைந்தது. தமிழில் கார்த்தியின் சுல்தான், விஜய்க்கு ஜோடியாக வாரிசு படங்களில் நடித்து பிரபலமானவர் ராஷ்மிகா மந்தனா.

இவர் நடிக்கும் படங்கள் அனைத்தும் நல்ல வரவேற்பை பெருகின்றன. சமீபத்தில் இவர் நடித்த சீதா ராமம், அனிமல் போன்ற படங்கள் ரசிகர்களை கவர்ந்தன. இந்நிலையில், ராஷ்மிகா மந்தனா அளித்துள்ள பேட்டியில் தன்னுடைய சிறு வயதில் பட்ட கஷ்டங்கள் குறித்து பகிர்ந்தார்,

'எனக்கு மற்றொரு பக்கமும் இருக்கிறது. நான் சிறுவயதில் இருந்தே பல போராட்டங்களை பார்த்து வருகிறேன். என் சிறு வயதில் வீட்டிற்கு வாடகை கொடுக்கக்கூட பெற்றோர் சிரமப்பட்டார்கள். இதனால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வீட்டை மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

என் குடும்ப சூழ்நிலை அறிந்து பெற்றோரிடம் எதையும் வாங்கித்தர கேட்கமாட்டேன். ஒரு பொம்மை கேட்டு கூட அவர்களை வற்புறுத்தியது கிடையாது. என் குழந்தை பருவ நினைவுகள் என்னை வெற்றியை சாதாரணமாக எடுத்துக்கொள்ளவிடவில்லை. ஏனென்றால் எப்போது வேண்டுமானாலும் அது இல்லாமல் போகலாம்'. இவ்வாறு கூறினார்.

# ஐஸ்வர்யா ராய்க்கு கையில் முறிவு ஏற்பட்டது எப்படி? காரணம் வெளியானது



இந்த ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸ் நாட்டில் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் முன்னாள் உலக அழகியும், பாலிவுட் நடிகையுமான ஐஸ்வர்யா ராய், பிரத்யேக உடைகள் அணிந்து ஒய்யாரமாக சிவப்புக் கம்பளத்தில் நடந்து பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தார். இந்த முறை ஐஸ்வர்யா ராய் கையில் மாவுக்கட்டு போட்டிருந்தார்.

அந்த புகைப்படம் வலைத்தளத்தில் வைரலானதை பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சியானார்கள். ஐஸ்வர்யா ராய்க்கு என்ன ஆனது என்று கேள்விகள் எழுப்பினர். விரைவில் குணமாக வேண்டியும் பதிவுகள் வெளியிட்டனர். தற்போது அதற்கான காரணம் வெளியாகி உள்ளது. அதன்படி ஐஸ்வர்யா ராய் வீட்டிலிருந்த போது எதிர்பாராத விதமாகத் தடுக்கி விழுந்துவிட்டாராம். இதில் அவரது கையில் முறிவு ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடந்து இரண்டு நாள் கழித்துத்தான் திரைப்படவிழாவில் கலந்து கொள்வதற்கான காஸ்டியூம் குறித்து முடிவு செய்யப்பட்டதாம். மேலும் கவனமாக இருக்கும் படியும், மேற்கொண்டு ஒரு காயம் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளவேண்டாம் என்றும் டாக்டர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# என் இடத்திற்கு இன்னொருவர் வருவார் நடிகர் சூரி



சூரியின் இடத்திற்கு வேறு நடிகர்கள் வருவார்கள். அவரை பின்தொடர்ந்து மேலும் நடிகர்கள் வருவார்கள். அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று நடிகர் சூரி கூறினார்.

துரை செந்தில்குமார் இயக்கத்தில் நடிகர்கள் சூரி, சமுத்திரக்கனி, சசிக்குமார் உள்ளிட்டப் பலர் நடித்திருக்கும் படம் 'கருடன்'. இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்று வரும் நிலையில், ரசிகர்களுடன் சேர்ந்து சூரி குரோம்பேட்டையில் படம் பார்த்தார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்து அவர் பேசியதாவது, "ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னுடைய அடுத்தக் கட்ட பயணத்திற்கு ரசிகர்கள் வரவேற்பு கொடுத்து வருகின்றனர். நம்பிக்கையாக இருக்கிறேன். அடுத்தடுத்து பயணிக்கவும் தயாராக இருக்கிறேன். முதல் படத்தில் என்னை அறிமுகப்படுத்திய இயக்குநர் வெற்றிமாறனுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்" என்றார்.

அடுத்தடுத்து காமெடி கதாபாத்திரங்கள் வந்தால் நடிப்பீர்களா என கேட்டபொழுது "ஹீரோ நன்றாக போய்க் கொண்டிருக்கிறது. அப்படியே செல்வோம். கதைக்காக தான் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றவரிடம், திரைப்பட நடிகர்கள் தொடர்ந்து சொன்ன நேரத்தை விட தாமதமாக வருவது குறித்து கேட்டபோது "சொன்ன நேரத்திற்கு வரவேண்டும் என்பதுதான் நாகரிகம். ஆனால், அடுத்தடுத்து இடங்களில் சென்று வரும் பொழுது ஒவ்வொரு இடங்களில் தாமதம் ஆவது இறுதி இடங்களில் கடைசியாக மொத்தமாக தாமதம் ஆகிறது" என்றார்.

மேலும் அவர் பேசியபோது, "காமெடியனாக நான் நடித்த பொழுது இருந்த ரசிகர்கள் இப்பொழுது ஹீரோவாக நடிக்கும் பொழுதும் வரவேற்பை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து கதைகளும் நன்றாக இருந்தால் நாம் கண்டிப்பாக நடிப்போம். காமெடியாக கதையும் நன்றாக இருந்தால் அதிலும் கண்டிப்பாக நடிப்பேன். ஹீரோவாக நடிப்பதற்கு இடையூறு இல்லாமல் இருக்கும் காமெடி கதாபாத்திரங்களில் கண்டிப்பாக நடிப்பேன்.

அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். சூரியின் இடத்திற்கு வேறு நடிகர்கள் வருவார்கள். அவரை பின்தொடர்ந்து மேலும் நடிகர்கள் வருவார்கள். அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். காமெடி நடிகராக வாய்ப்பு தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நாம் வாய்ப்பு கொடுப்பதில் தவறில்லை" என்று அவர் கூறினார்.

# சுப்மன் கில்லுடன் திருமணமா? விளக்கம் கொடுத்த நடிகை ரிதிமா பண்டிட்



கிரிக்கெட் வீரர் சுப்மன் கில், நடிகை ரிதிமா பண்டிட்டை கடந்த சில நாட்களாக டேட்டிங் செய்து வருவதாகவும் அவர்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும் சமூக வலைதளத்தில் வதந்திகள் பரவியது.

இந்திய கிரிக்கெட் அணியில் இளம் நட்சத்திர வீரராக களமாடி வருபவர் சுப்மன் கில். தனது அதிரடி தொடக்க ஆட்டத்திற்கு பெயர்பெற்ற கில் கடந்த 2019ம் ஆண்டில் இந்திய அணிக்காக அறிமுகமானார். ஐ.பி.எல் தொடருக்கான குஜராத் டைட்டன்ஸ் அணியை கேப்டனாக வழிநடத்திய கில், 12 போட்டிகளில் 426 ரன்களை எடுத்தார். அமெரிக்காவில் தொடங்கும் டி20 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியில் அவர் காத்திருப்பு வீரராக இடம் பிடித்துள்ளார். இந்நிலையில், கிரிக்கெட் வீரர் சுப்மன் கில், சின்னத்திரை நடிகை ரிதிமா பண்டிட்டை கடந்த சில நாட்களாக டேட்டிங் செய்து வருவதாகவும் அவர்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும் சமூக வலைதளத்தில் வதந்திகள் பரவியது.

இது தொடர்பாக ரித்திமா பண்டிட் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள சமீபத்திய வீடியோவில், "அனைவருக்கும் காலை வணக்கம், பத்திரிகையாளர்களின் சரமாரியான போன் கால் தான் என்னை எழுப்பியது. எனக்கு நடக்க இருக்கும் திருமணம் குறித்து தான் அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் அது யாருடன்? அது நடக்க போவதில்லை. உங்களுடைய நாளை இனிமையாக துவங்குங்கள். அப்படி ஏதாவது நடப்பதாக இருந்தால் நான் உங்களுக்கு தெரிவிப்பேன்" என்று விளக்கம் கொடுத்தார். கடந்த சில மாதங்களுக்கு முன் சச்சின் டெண்டுல்கரின் மகள் சாரா டெண்டுல்கர் மற்றும் பாலிவுட் நடிகை சாரா அலி கான் ஆகியோருடன் சுப்மன் கில் டேட்டிங் செய்து வருவதாக சமூக வலைதளத்தில் வதந்திகள் பரவியது குறிப்பிடத்தக்கது.

# குத்துச்சண்டை: பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார் அமித் பங்கல்




பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகரில் ஒலிம்பிக் போட்டி நடைபெற இருக்கிறது. இந்த ஒலிம்பிக் போட்டியில் விளையாடுவதற்காக தகுதி பெறுவதற்கான தகுதிச்சுற்றுகள் தற்போது நடந்து வருகிறது.

ஏற்கனவே நடந்த தகுதிச்சுற்று ஒன்றில் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான வாய்ப்பை நிஷாந்த் தேவ் இழந்தார்.

இதற்கிடையே, மற்றொரு தகுதிச்சுற்று சமீபத்தில் நடைபெற்றது. இதில் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற இந்தியாவின் நிஷாந்த் தேவ் 71 கிலோ எடைப்பிரிவு போட்டியில் மால்டோவா வீரரை 50 என வீழ்த்தி பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இடம்பிடித்தார்.

இதன்மூலம் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இந்திய வீரர் ஆவார். ஏற்கனவே இந்தியாவைச் சேர்ந்த பெண் வீராங்கனைகளான நிகாத் ஜரீன் (50 கிலோ), பிரீத் பவார் (54 கிலோ), லாவ்லினா போர்கோஹெய்ன் (75) ஆகியோர் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதிபெற்றுள்ளனர்.

இந்நிலையில், 51 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் அமித் பங்கல் வெற்றி பெற்று பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதிபெற்றார். இதன்மூலம் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற 2வது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

# குத்துச்சண்டை தகுதி சுற்றில் வெற்றி: ஜாஸ்மின் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி



பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான குத்துச்சண்டை தகுதி சுற்று பாங்காக்கில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் 51 கிலோ எடை பிரிவின் கால்இறுதி ஆட்டம் ஒன்றில் உலக சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான இந்திய வீரர் அமித் பன்ஹால் 50 என்ற கணக்கில் சீனாவின் சுவாங்லியை தோற்கடித்து அரைஇறுதிக்கு முன்னேறினார்.

இதே போல் பெண்கள் 57 கிலோ எடைபிரிவின் கால்இறுதியில் தேசிய சாம்பியனான இந்தியாவின் ஜாஸ்மின் லம்போரியா, மரின் கமாராவை (மாலி) சரமாரி தாக்குதலால் நிலைகுலைய வைத்து எளிதில் வெற்றி பெற்று அரைஇறுதியை எட்டினார். வெற்றியின் மூலம் அரியானாவைச் சேர்ந்த பன்ஹால், ஜாஸ்மின் இருவரும் பாரீஸ் ஒலிம்பிக் கோட்டாவை உறுதி செய்தனர். இவர்களையும் சேர்த்து குத்துச்சண்டையில் ஒலிம்பிக்குக்கு இதுவரை 6 இந்தியர்கள் தகுதி பெற்றுள்ளனர். ஏற்கனவே நிகாத் ஜரீன், பிரீத்தி பவார், லவ்லினா, நிஷாந்த் தேவ் ஆகியோர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புரோ ஆக்கி லீக்: ஜெர்மனியை வீழ்த்தி இந்தியா வெற்றி




9 அணிகள் இடையிலான 5வது புரோ ஆக்கி லீக் போட்டி பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது. இதில் லண்டனில் நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 5வது இடத்தில் இருக்கும் இந்திய அணி, உலக சாம்பியன் ஜெர்மனியை சந்தித்தது. இதில் தொடக்கத்தில் சற்று நேரம் ஆதிக்கம் செலுத்திய ஜெர்மனி அணியால் அந்த உத்வேகத்தை தொடர முடியவில்லை. அபாரமாக செயல்பட்ட இந்திய அணி 30 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தியது. இந்திய அணியில் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் (16வது நிமிடம்), சுக்ஜீத் சிங் (41வது நிமிடம்), குர்ஜந்த் சிங் (44வது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். 13வது ஆட்டத்தில் ஆடிய இந்தியா 24 புள்ளிகளுடன் 3வது இடத்தில் உள்ளது. நெதர்லாந்து அணி 12 ஆட்டங்களில் ஆடி 26 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அர்ஜென்டினா அணி 14 ஆடங்களில் ஆடி 26 புள்ளிகளுடன் 2வது இடத்திலும் இருக்கின்றன. நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

# நார்வே செஸ் போட்டி: 2ம் நிலை வீரரை சாய்த்தார் பிரக்ஞானந்தா, பெண்கள் பிரிவில் வைஷாலி ஆதிக்கம்




12வது நார்வே சர்வதேச செஸ் தொடர் அங்குள்ள ஸ்டாவன்ஞரில் நடந்து வருகிறது. இதில் 6 வீரர், 6 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். அவர்கள் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். மொத்தம் 10 சுற்று முடிவில் முதலிடம் பிடிக்கும் வீரர், வீராங்கனை மகுடம் சூடுவார்.

ஆண்கள் பிரிவில் நேற்று நடந்த 5வது சுற்றில் இந்திய கிராண்ட்மாஸ்டரான தமிழகத்தைச் சேர்ந்த பிரக்ஞானந்தா, 2ம் நிலை வீரர் அமெரிக்காவின் பேபியானா காருனாவை சந்தித்தார். கிளாசிக்கல் முறையில் வெள்ளைநிற காய்களுடன் ஆடிய பிரக்ஞானந்தா 77வது காய் நகர்த்தலில் காருனாவை வீழ்த்தி 3 புள்ளிகளை பெற்றார். ஏற்கனவே 'நம்பர் ஒன்' வீரர் கார்ல்செனை (நார்வே) தோற்கடித்த பிரக்ஞானந்தாவுக்கு மற்றொரு மகிழ்ச்சிகரமான நாளாக இது அமைந்தது. இந்த வெற்றியின் மூலம் பிரக்ஞானந்தா 'பிடே' தரவரிசையில் 4 இடங்கள் முன்னேறி 10வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மற்ற ஆட்டங்களில் கார்ல்சென், பிரான்சின் அலிரெஜாவையும், அமெரிக்காவின் ஹிகரு நகமுரா, உலக சாம்பியன் சீனாவின் டிங் லிரெனையும் சாய்த்தனர். 5வது சுற்று முடிவில் நகமுரா 10 புள்ளிகளுடன் முதலிடத்திலும், கார்ல்சென் 9 புள்ளிகளுடன் 2வது இடத்திலும், பிரக்ஞானந்தா 8½ புள்ளிகளுடன் 3வது இடத்திலும் உள்ளனர். பெண்கள் பிரிவின் ஒரு ஆட்டத்தில் இந்திய இளம் புயல் ஆர்.வைஷாலி, சீனாவின் லீ டிங்ஜியை எதிர்கொண்டார். வெள்ளை நிற காய்களுடன் சாதுர்யமாக ஆடிய வைஷாலி 39வது நகர்த்தலில் டிரா கண்டார். இதைத் தொடர்ந்து முடிவை அறிய அர்மாகேட்டன் முறைக்கு ஆட்டம் நகர்ந்தது. இதில் 76 வது நகர்த்தலில் எதிராளிக்கு வைஷாலி 'செக்' வைத்து வெற்றிக்கனியை பறித்தார். அவருக்கு 1½ புள்ளியும், டிங்ஜிக்கு ஒரு புள்ளியும் கிடைத்தது. இன்னும் 5 சுற்று எஞ்சியுள்ள நிலையில் பிரக்ஞானந்தாவின் சகோதரியான வைஷாலி 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். உக்ரைனின் அன்னா முசிசுக் 9 புள்ளிகளுடன் 2வது இடத்தில் இருக்கிறார்.



அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்

விளக்கம்:

பொறாமை உடையவனைத் திருமகள் கண்டு பொறாமைப்பட்டுத் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி நீங்கி விடுவாள்.

# சர்வதேச சிலம்பம் போட்டி: சென்னை வீரர்கள் பதக்கம் வென்றனர்

சர்வதேச சிலம்பம் போட்டி மலேசியாவில் நடந்தது. இதில் பல்வேறு வயது பிரிவினருக்கு ஒற்றை கொம்பு, வாள்வீச்சு, இரட்டை கொம்பு உள்பட பலவகையான போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஆண்களுக்கான 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சென்னை விருகம்பாக்கத்தை சேர்ந்த பள்ளி மாணவர் வெனய் ஶ்ரீராஜ் வாள்வீச்சில் தங்கப்பதக்கமும், ஒற்றை கம்பம் பிரிவில் வெண்கலப்பதக்கமும் வென்றார். இதேபோல் ஆண்கள் பிரிவில் சென்னை வீரர் எஸ்.சதீஷ் வாள்வீச்சில் வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றினார். பதக்கம் வென்ற இருவரும் சென்னை சின்மயா நகரில் உள்ள நேதாஜி சிலம்பம் அகாடமியில் பயிற்சியாளர் சுபாஷ் பாண்டியிடம் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.